**சுவாரசியமான குறிப்பு:**
ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதருக்கு தினமும் காலையில் தந்வந்தரி சந்நிதியில் இருந்து சுக்குமல்லி காப்பி தயாராகி முதலில் நிவேதனம் செய்யப்பட்ட பின்னே மற்ற உணவு வகைகள் சமர்ப்பிக்கப் படுகின்றன.

சிறுநீரகக் கோளாறுகள் உள்ளவர்களும் இதைக் குடித்துவர நல்ல முன்னேற்றம் வரும்.இதில் பல உள்வீக்கங்களை குணமாக்கக் கூடிய ரசாயணங்களும் உள்ளன என்று ஆய்வுகள் கூறுகின்றன.

**ஜூஸ் சிகிச்சை:** [ நாற்பத்தியோரு நாட்களுக்குத் தொடர்ந்து பின்பற்றவும்]

* ***கேரட்***

* ***வெள்ளரிக்காய்***

* ***முள்ளங்கி இலைகள், சிறு முள்ளங்கித் துண்டு [ இத்துடன் ஒரு கப் கேரட் ஜூஸ் சேர்த்துக் கொள்ளலாம்.ஒரு வெள்ளரிக்காயும் சாப்பிடலாம்]***

* ***க்ரேன்பெரிஸ்***

* ***தர்பூசணி***

* ***திராட்சை***

* ***சாத்துக்குடி***

* ***மாம்பழ ஜூஸ்***

* ***பீச் பழம்***

**குறிப்பு:** காலத்துக்கும் பருவத்துக்கும் ஏற்பக் கிடைக்கும் பழவைகைகளை ஜூஸ் செய்து குடிக்கவும்.

அடுத்த அடுத்த சிகிச்சை முறைகளை முறையே பின்பற்றி விரைவில் குணம் அடைய வாழ்த்துக்கள்!

நன்றி!

E mail: gethealed@sakthifoundation.org

Web: www.uni5.org

# சக்தி பௌண்டேஷன்-

## மருத்துவப் பகுதி.

## யூரினரி இன்ஃபெக்ஷன்

*“ நோய் இன்னது என்று அறிதலும், அதற்கான முழுமையான காரணத்தை அறிதலும் அதன் பின் உரிய மருத்துவ சிகிச்சையை மேற்கொள்ளுதலுமே பலனைத் தரும்”*
** திருவள்ளுவர்.*

---

சக்தி மருத்துவப் பகுதியில் சொல்லப்பட்ட ஐந்துவகை சிகிச்சை முறைகளை, முழுமையான பலன் கிடைக்க; தவறாமல் தொடர்ந்து நாற்பத்தியோரு நாட்கள் **[41]** பின்பற்றுக.

சக்தி பௌண்டேஷன் உறுப்பினர்கள் எவரும் மருத்துவப்பட்டம் பெற்ற மருத்துவர் அல்லர்.அவர்கள் ஒரு போதும் வியாதியை டயக்னைஸ் செய்வதும் இல்லை.மருந்துகள் தருவதும் இல்லை.மருத்துவ குணமுள்ள மூலிகைகளை உணவுடன் சேர்த்த துணை மருந்தாகவே கூறுகிறோம்.

இங்கு தரப்படும் மருத்துவ ஆலோசனைகள் அனைத்தும் முறையான ஆய்வுகளின் அடிப்படையிலும் மூலிகைகளின் மருத்துவ குணம் பற்றிய விழிப்புணர்வின் அடிப்படையிலும் தரப்பட்டுள்ளது.முறையாக மருத்துவம் பயின்று பயிற்சி செய்யும் மருத்துவரின் சிகிச்சைக்கு இவை ஒரு போதும் எதிராகாது.

இங்குள்ள மருத்துவக் குறிப்புகள், சிகிச்சை முறைகள் மற்றும் ஆலோசனைகள் அனைத்தும் சக்தி பௌண்டேஷனுக்கே உரியது.இதைப் பெறுவோர் சக்தி பௌண்டேஷனிடம் எழுத்து மூலமான அனுமதி பெறாமல் பிற இடங்களில் தருவதோ , பிரதிகள் எடுத்து உபயோகிப்பதோ கூடாது.

பஞ்சபூத சிகிச்சை முறையில் ஐந்து நிலைகளில் சிகிச்சை வழங்கப்படுகிறது.இவற்றைப் பற்றிய

விளக்ககங்கள் "***இர்ரெகுலர் மென்ஸ்ட்டுரேஷன்*** " என்ற தலைப்பின் உள்ளே உள்ள தமிழாக்கத்தில் இடம் பெறுகிறது.தண்ணீர் சிகிச்சை, வாயு, அக்னி மற்றும் ஆகாச சிகிச்சை முறைகளை அதில் உள்ள படி கடைப்பிடிக்கவும்.

மற்ற முக்கிய மருத்துவ சிகிச்சைகள் இனி இங்கே தரப்படுகின்றன:
சிறுநீரகங்களை பலப்படுத்தும் பார்லி டானிக்:
இரவில் தேவையான அளவு பார்லி அரிசியை ஊற வைத்து, மறுநாள் சாதமாகவோ கஞ்சியாகவோ வடித்து உண்டு வர சிறுநீரகங்கள் பலப்படும்.

**சோளக்கருது நார் சூப்**:
[கூடிய வரை ஆர்கானிக் சோளக்கருதுகளை வாங்கவும்]
அதில் உள்ள பட்டு போன்ற நார்களை எடுத்துக் கழுவித் தண்ணீரில் இட்டு நன்கு கொதிக்க வைத்து வடிகட்டி சூப்பாகக் குடித்துவர நல்ல பலன் கிடைக்கும்.



**அன்னாசியின் மகத்துவ குணம்:**
அன்னாசி ஜூஸோ அல்லது பழத்துண்டுகளையோ உண்க.அதற்கு முன்னோ பின்னோ ஒரு டீஸ்பூன் மஞ்சளை உண்க.தயவு செய்து செயற்கை ஜூஸ் வகைகளைக் குடிக்க வேண்டாம்.இதனால் உள் வீக்கமும் கிருமிகளின் தாக்கமும் குணமாகும்.



**சுக்குமல்லி காப்பி:**



பாலுடன் டீ காப்பி குடிப்பது ஆங்கிலேயர் கற்றுத் தந்த முறை.ஆனால் அதற்கு முன் தினமும் காலை மாலையில் சுக்கு, தனியா மற்றும் கருப்பட்டி சேர்த்துத் தயாரித்த டிகஷனையே குடித்து வந்தனர்.இதனால் சிறுநீரகங்கள் புத்துணர்வு பெறுகின்றன.

